**மாகாண வீதிகள் செயற்திட்டம் - ஊவா மாகாணம் - 2014**

மாகாண வீதிகள் செயற்திட்டம் - ஊவா மாகாணத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2010 சனவரி 11 ஆம் திகதிய 4630 எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4.09(ஆ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

மாகாண வீதிகள் செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் படி, ஊவா, கிழக்கு மற்றும் வடக்கு மாகாண சபைகள் என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளதுடன் உள்ளூராட்சி மற்றும் தற்போதைய மாகாண சபைகள் அமைச்சு மாகாண சபைகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளது. முன்னேற்றப்பட்ட வீதி உட்கட்டமைப்பின் நிலைபேறான முகாமைத்துவத்தின் ஊடாக பெறுனரின் ஊவா, கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களிலுள்ள சமூக பொருளாதார நிலையங்களுக்கான அணுகுவழியை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் பிரதான நோக்கமாக உள்ளது. செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் படி, செயற்திட்டம் - ஊவா மாகாணத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 7,592 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 67.2 மில்லியனானதுடன் அதில் ரூபா 6,800 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 60 மில்லியன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2010 மார்ச் 31 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2015 மார்ச் 31 அளவில் பூர்த்தியாக்க வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

## 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த

பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும் இந்த அறிக்கையின் பந்தி 5 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

ரூபா 729 மில்லியன் கோரி ஒப்பந்தகாரர் ஒருவரால் தொடரப்பட்ட நீதி மன்ற வழக்கில் எழும் நிகழத்தக்க பொறுப்பு நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டம் | செயற்திட்டத்தின் 09 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 421,704 கூட்டு மொத்தத் தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரி அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1987 இன் 3 ஆம் இலக்க அரச ஒப்பந்தத்தின் அதிகாரச்சட்டத்தின் 6(1)(அ) மற்றும் 12 ஆம் பந்திகள் | ரூபா 5 மில்லியனிற்கு மேல் பெறுமதியுடைய ஒவ்வொரு 102 ஒப்பந்தமும் ஒப்பந்தகாரரால் அரச ஒப்பந்த பதிவாளருடன் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. மேலும், கொள்வனவுக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் உறுப்பினர்கள் ஒப்பந்தகாரரால் அரச ஒப்பந்த பதிவாளருடன் பதிவு செய்திருக்காத ஒப்பந்தகாரருக்காக ஒப்பந்தங்கள் வழங்குவதற்காக ஏற்படும் தண்டனைகளிற்கு பொறுப்புடையவராகும். |
| (இ) நிதிப்பிரமாணம் 756 மற்றும் 757 | செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் கணிப்பீட்டு சபை நடாத்தப்பட்டிருக்காததுடன் அவற்றின் அறிக்கைகளும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மற்றும் செய்ற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதி பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | நிதிகளின் பயன்பாடு 2014 ஆம் ஆண்டின் போது | | 2014 திசெம்பர் 31 வரை | |
|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ஐ.அ.டொலர் மில் | ரூபா மில் |
| ஐடிஏ | 60 | 6,800 | 9.24 | 1,206.00 | 51.72 | 6,413.31 |
| இலங்கை அரசாங்கம் | 7.2 | 792 | - | 393.74 | - | 705.94 |
| மொத்தம் | 67.2 | 7,592 | 9.24 | 1,599.74 | 51.72 | 7,119.25 |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2004 இல் சாத்திய வளக் கற்கை தயாரிக்கும் நேரத்தில் செய்யப்பட்ட வேலைகள் மற்றும் கிரய மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டு 2010 இல் சிவில் வேலைகள் மீதான ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தது. இதன் விளைவால், ஒப்பந்த வேலைகளின் நோக்கெல்லை மற்றும் அவற்றின் கிரயங்கள் குறிப்பிடத்தக்களவு மாற்றமடைந்திருந்தது. ஆகவே, செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் செயற்திட்ட காலப்பகுதியின் இறுதியில் ரூபா 584 மில்லியனால் அதிகரித்திருந்தது.

(ஆ) சர்வதேச அபிவிருத்தி முகவராண்மையின் ஐபீஆர்டி கடன்கள் மற்றும் ஐடிஏ கடன்கள் என்பவற்றின் கீழான கொள்வனவு வழிகாட்டல்களின் பிரகாரம், ஆரம்ப கிரய மதிப்பீட்டின் 15 சதவீதத்தினை விஞ்சியிருந்த விலை முரண்களிற்காக கடனளிக்கும் முகவராண்மையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்க வேண்டுமென வேண்டப்பட்டது. எவ்வாறாயினும், கொட்டக்கொட- புல்மோட்டை-அடியரவத்தை –மஸ்பனே – ஜலகமுவ வீதியின் புனரமைப்புகளில் 09 சந்தர்ப்பங்களில் செய்யப்பட்ட ரூபா 237.2 மில்லியன் பெறுமதியான விலை முரண்கள் சர்வதேச அபிவிருத்தி முகவராண்மையால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) களடுவா- கந்தேகெட்டிய- கரமெட்டிய வீதியின் புனரமைப்பிற்கான வடிகாலமைப்பு முறைமை முறைப்படி அமுலாக்கப்பட்டிருக்காததுடன் இதன்விளைவால், வீதியின் புனரமைப்பு வேலைகள் 2012 ஒக்தோபர் அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்த போதிலும் 2014 திசெம்பர் 31 இல் 87.5 சதவீதம் மாத்திரம் முன்னேற்றம் காட்டியிருந்தது. மேலும், புனரமைப்பு வேலைகள் முறைப்படி வடிவமைக்கப்பட்டிருக்காததுடன் இதன்விளைவாக, 138 குடும்பங்களிற்கான குடிதண்ணீர் வழங்கிய நீர் வழங்கல் திட்டம் மற்றும் 41 ஏக்கர் பரப்பளவுள்ள நெல் வயல்கள் என்பன வெள்ள நீரால் பாதகமாக பாதிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2014 திசெம்பர் அளவில் பூர்த்தியாக்கப்பட்டிருந்த மடிதல- பத்னவத்தை- தென்னப்பகுவ- கிரிவெகெர வீதியின் பல இடங்களில் விளிம்புகள் முறையான வடிகாலமைப்பு முறைமை மற்றும் மதகுகள் போன்ற இன்மை காரணமாக பல தடவைகள் அடித்துச்செல்லப்பட்டிருந்தது. மேலும், ஒப்பந்தகாரர்களால் மேற்கொள்ளப்பட்ட வீதிப் பராமரிப்பு வேலைகள் இயந்திரம், உபகரணங்கள் மற்றும் முறையான பராமரிப்பு பட்டியல் இன்மை காரணமாக மிகவும் நலிவாக இருந்தது.

**3.3 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்**

பின்வரும் அதவானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்ட உத்தியோகத்தர்களின் பயன்பாட்டிற்காக ஒப்பந்தகாரர் ஊடாக குத்தகை அடிப்படையில் செயற்திட்டமானது சுற்றுலாவிடுதியொன்றை பெற்றிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 1,636,291 தொகையான வாடகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பதிவேடுகளின் பிரகாரம், சுற்றுலாவிடுதி செயற்திட்டத்தின் உத்தியோகத்தர்களால் மீளாய்வாண்டின் 47 நாட்களிற்காக மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) களடுவா - கந்தேகெட்டிய- கரமெட்டிய வீதியின் வீதிப் புனரமைப்பு வேலைகளானது வீதிப் புனரமைப்பு வேலைகளின் சாத்தியத்தை உறுதிப்படுத்துவதற்கு கேள்வியாளரிடமிருந்து மேலும் தகவல்களை பெற்றுக்கொள்ளாமல் பொறியியல் மதிப்பீடு 32 சதவீதத்தைவிடக் குறைவாக இருந்த ரூபா 767.33 மில்லியன் கிரயத்தில் வெளிநாட்டு கூட்டுமுயற்சியுடன் ஒப்பந்தகாரர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும், இலங்கையில் கூட்டுமுயற்சி உடன்படிக்கை பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. வீதிப் புனரமைப்பு வேலைகளின் முன்னேற்றம் வேலைகளின் எதிபார்ப்பிற்கு ஊவா மாகாண சபையின் பிரதம செயலாளரின் அறிவுறுத்தல் இருப்பினும் பட்டியலிடப்பட்ட இலக்குகளைவிட பின்தங்கியிருந்தது. எவ்வாறாயினும், அறவிடப்பட்ட ரூபா 42 மில்லியன் தொகையான தாமதக்கட்டணங்கள் தகுந்த காரணங்கள் இல்லாமல் பின்னர் ஒப்பந்தகாரருக்கு திரும்ப செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரர் நடுவர் தீர்ப்பு வழக்கு தொடரப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்திற்குள் எழுந்த தகராறை தீர்ப்பதற்கு ரூபா 729 மில்லியன் தொகை கோரப்பட்டது. ஒப்பந்தம் பூர்த்தியாக்கலிலுள்ள தாமதங்களில் தாமத கோரிக்கைகள் சமர்ப்பிப்பதற்கு செயற்திட்டத்தால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 18.63 மில்லியன் தொகையான கேள்விப் பெறுமதியின் 6 சதவீத மேலதிக கட்டணங்கள் கேள்வித் தகுதி காலத்தின் போது மதிப்பாய்வு மற்றும் கேள்வி வழங்குதல் என்பவற்றின் தாமதங்களால் 05 ஒப்பந்தகாரர்கள்களிற்கு செயற்திட்டத்தால் செலுத்தப்பட்டிருந்தது. கொள்வனவு திட்டத்தின் பிந்திய அமுலாக்கல், ஆலோசனையாளரின் நியமனத்தில் தாமதம் மற்றும் குறைநிரப்பு கடன் உடன்படிக்கையிலுள்ள தாமதம் போன்றன காரணமாக அத்தகைய வீதிப் புனரமைப்பு வேலைகள் தொடங்கப்பட்டிருந்தது. ஆதலால், குறித்த நோக்கத்திற்காக செயற்திட்ட பெறுகைகள் வினைத்திறனாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என குறிக்கின்றது.

(ஈ) ஆலோசனையாளர்கள் மற்றும் செயற்திட்ட கண்காணிப்பு பிரிவு உத்தியோகத்தர்கள் என்போருக்கு வதிவிடம் மற்றும் போக்குவரத்து வசதிகள் வழங்குவதற்கு 06 ஒப்பந்தங்களின் அளவீட்டுப் பட்டியலில் ஒப்பந்தத்தின் மொத்தக் கிரயத்தின் 6.9 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 299.3 மில்லியன் தொகை உள்ளடக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. ஆலோசனையாளருடன் கைசாத்திடப்பட்ட உடன்படிக்கைகளின் பிரகாரம், 15 வாகனங்கள் ஆலோசனையாளருக்கு வழங்கவேண்டுமென வேண்டப்பட்டது. எவ்வாறாயினும், 25 வாகனங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 50.5 மில்லியன் மேலதிக தொகை அவற்றிற்கு செலவழிக்கப்பட்டிருந்தது.

### 3.4 நிதிக்கட்டுப்பாட்டு விடயங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பிரகாரம், செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்களின் உள்ளக கணக்காய்வு மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் உரிய அமைச்சால் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் அவற்றின் அறிக்கைகள் செயற்திட்ட அமுலாக்கல் முகவராண்மை மற்றும் கடனளிக்கும் முகவராண்மை என்பவற்றிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஊவா மாகாணத்தில் மாகாண வீதிகளின் பராமரிப்பிற்காக 2011 முதல் 2014 வரையான காலத்திற்காக செயற்திட்டத்தின் கீழ் செய்யப்பட்ட ரூபா 2,600 மில்லியன் தொகையான ஒதுக்கீட்டில் ரூபா 2,121 மில்லியன் மாத்திரம் செயற்திட்டத்தால் பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 3.5 செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் சாத்தியவளக் கற்கைகளின் பிரகாரம், ஊவா மாகாணத்திற்குள் சமுதாய போக்குவரத்து முறைமையை முன்னேற்றுவதற்கு இயலத்தக்க வகையில் செயற்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட வீதிகளின் பயண நேரத்தை குறைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், வீதிப் புனரமைப்பின் முன்னரும் பின்னரும் பயண நேரத்தை மதிப்பிடுவதற்கும் மாகாண சபையின் கீழ் சமூக சேவை பஸ்களின் நேர அட்டவணை திருத்தம் செய்வதற்கும் ஊவா மாகாண சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வீதிச் சொத்து முகாமைத்துவ முறைமை தாபிப்பதற்கான தேவை செயற்திட்டத்தின் சாத்தியவளக் கற்கையில் இனங்காணப்பட்டிருந்த போதிலும் அந்த முறைமையை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.